ரிஜிஸ்டர் நெ. 127. | போஸ்ட் பாக்ஸ் நெ. 346. | டெலிபோன்-நெ.

DRAVIDAN
திராவிடன்

நாடோறும் வெளிவருவது

நம்பிக்கையான
வர்த்தக ஸ்தலம்.
சகல சாமான்களும் புத்தகங்களும்
நாணயமும் நல்லதாயும் கிடைக்கும்.
எஸ். தண்டபாணி கம்பனி
292 சைனபஜார், சென்னை

தண்டபாணி
வைத்தியசாலை.
சகல வியாதிகளுக்கும் உத்தரவாதத்
துடன் மருந்துகள் கொடுக்கப்படும்.
திராவிடில் பழைய வாயில்.
292, சைனபஜார், மதறாஸ்

ஆசிரியர் திரு. சனக சங்கரகண்ணப்பர்.

மலர்-13] சென்னை விபவஹு ஐப்பசிமீ 8உ 1928ஹு அக்டோபர்மீ 24உ புதன்கிழமை [இதழ்-241

"குறித்த தவணையில் கிடைக்க வேண்டுமானால்" இதே குறிப்பிட்ட விலாசத்துக்கு போங்கள். மூக்கு திருகு முதற்கொண்டு எல்லாவித உயர்ந்த நகை வேண்டுமானாலும் அசல் சவரப் பொன்னுக்கும் சிலை வெள்ளிக்கும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கை இருப்பில் அநேக நகைகள் இருக்கிறது.

உம்முடி ராமய்ய செட்டி குருசாமி செட்டி கம்பெனி.
நகை தொழிலாளர்கள், 25, வைசுபஜார் ரோட், மதருஸ்.
தந்தி:—"உம்மிடியார்" டெலிபோன் 2802.
(118)

கலியாணகாலத்துக்கு
தேவையான சாமான்கள்,
அடியிற்கண்ட எங்களது ஷாப்பில் கலியாணகாலத்துக்குத் தேவையான சகல சாமான்களும் விலை சகாயமாய் கிடைக்கும். வெகு சேர்த்தியான உல்லன், பாப்லின், டுவீட், சர்ஜ், பிரீசர், மோயர், வெனிஷன், வைகுரு சில்க், டஸ்ஸர் சில்க், சார்டட் சாதா பாப்லின்கள், லின், இங்கிலீஷ் ஷர்டிங்கள், டுவில்கள், பிஜி, ஜெர்மன் சில்க்கள், கவுண்டர்வேன் பெட்ஷீட்டுகள், மெத்தை லோசவிலைகள், ரெடிமேட் ஷர்ட்டுகள், பெல்ட் கேப்புகள், பலவித பனியன்கள், சுதேசி சாமான்கள் முதலியவைகளும் மற்றும் பல சாமான்களும் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்களை உடனே கவனித்து கல்ல சாக்காக அனுப்பிவைக்கப்படும்.
கிருஷ்ண அண்டு கோ.,
169 243. 244, சைனபஜார் ரோடு, சென்னை.

பிரிட்டிஷ் இந்தியா
ஸ்டீம் நாவிகேஷன்
கம்பெனி லிமிடெட்.
இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது
மதராஸிலிருந்து ரெங்கூனுக்கு கப்பல் பிரயாணம்
(காலை 10 மணிக்கு)
,, எத்திபோபியா 26—10—28
மதராஸிலிருந்து
ஸ்ட்ரெயிட்ஸுக்கு
கப்பல் பிரயாணம்
(மாலை 4 மணிக்கு)
,, ரோண 31—10—28
இவை விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:
பின்னி & கோ, மதராஸ்
லிமிடெட்,
(5) ஏஜண்ட்ஸ் மதராஸ்.



MAJESTIC CABINET MART
HIGH CLASS FURNITURE.
எங்கள் கம்பெனியில் உயர்ந்த தேக்கு, ரோக்கு மரத்தால் செய்யப்பட்ட பீரோல்கள், மேஜைகள், நாற்காலிகள், சோபாக்கள் கட்டில்கள் முதலிய சாமான்கள் விற்கப்படும். மிகுந்த வேலைப்பாடு உடையது. விலைகுறைவு. நயமான சாமான்கள். உடனே எழுதுங்கள்.
மெஜஸ்டிக் காபினெட் மார்ட்.
49, வாலாஜாரோட்.
மவுண்ட்ரோடு, மதராஸ்.
(250)

கொக்கோகவசனம்.
இன்ப மர்மங்களை விளக்கும் புதிய
இதுவரை எதிலும் வெளிவராத இன்ப விஷயங்கள் எல்லாம் விளக்கமாக அதிவீர ராமர் பாடிய பழைய கொக்கோகத்தின்படி தேசபக்த பத்திராதிபர் ஜெ. பி. பாவலரால் எழுதப்பட்டுள்ளன. இதில் காணாத விஷயங்களே இல்லை. கல்யாணமானவர்களுக்கும் ஆகாதவர்களுக்கும் இது முக்கியமாக வேண்டிய நூல். பெயரளவில் வெளிவந்த பல போலி நூல்கள் போல் அல்லாது காதல், சாதி, சாதிப் பொருத்தம், அமுதநிலை, இன்பமுறை, இன்பவிராமம், பன்னியவற புட்பங்கள் போன்ற ஆதாரக்கணக்கான விஷயங்களைப் படங்களுடன் விளக்கும் உண்மையான நூல். 280 பக்கமுள்ள புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 1—0—0.
தனம் அண்டு கம்பெனி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
(213)

24-மணி நேரத்தில் குணம்
எங்களின் டாக்டர் வி. ஜி. என். சிங்குவரம்லோஷன் உபயோகிப்பதினால், படை, சாகப்படை, எச்சநிம்பு, மற்ற எல்லா சர்ம வியாதிகள் யாவும் 24-மணிக்குள் தீரும். பெட்டி 1-க்கு அணு 10.
எஸ். வி. ஆர். பகவான் & கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.
(206)

WANTED Candidates for Telegraph Station Master's Classes Boarding arrangements. Particular, with Railway Fare Certificates on 2 anna stamps. Presidency Telegraph College, Royapettah, Madras. 102. A.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும்.
5 வருஷம் உத்தரவாதம்.
ரூ. 4-15-0 வி. பி. செலவு.
ஜினன் வாட்ச கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.
(112-பி.)

டெலிபோன் நெ. 3455.
அப்பா அண்டு கம்பெனி,
சகலவிதமான மருந்து சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும். மருந்துகள் தயார் செய்து கொடுக்கப்படும்.
எல்லாவிதமான பேடண்ட் மருந்துகளையும் நேரே இறக்குமதி செய்து ஸ்டாக் செய்திருக்கிறோம். மூலிகைகள், ரசாயன சாமான்கள்.
ஆஸ்பத்திரிக்கு வேண்டிய மருந்து முதலிய சாமான் வகையராக்கள் கிடைக்கும்.
விலையோ மிகக் குறைவு.
கடிதங்களும் ஆர்டர்களும் உடனுக்குடன் ஜாக்கிரதையாய் கவனிக்கப்படும்.
அப்பா பில்டிங்க்ஸ்,
(247) 286, சைனபஜார் தெரு, மதராஸ்.

கௌஹர்!!
ஜான் காதல்
அல்லது
காஷ்புரி ரஹஸ்யம்
என்னும் இந் நாவலைப் படித்தீர்களா?!!
படித்தால்
பரமானந்த மடைவீர்கள்!!

இக் கவிதை தப்பறியும் நாவல்நூலாகாலும் இலேசில் தலை தெரிந்ததாகும். இதைப் படித்தாலன்றி இதன் மேன்மையை விளம்பரத்தாலுணர்த்த முடியாது. ஆச்சரிய சம்பவங்களும் மர்ம இரகஸியங்களும் அதிகம் நிறைந்துள்ளது. பல ஹாப்டோன் படங்களும் மூன்று கலர் ஹாப்டோன் படமொன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. தாருல் இஸ்லாம் ஆசிரியரால் எழுதப்பட்டது. 360 பக்கம் கொண்ட முதற் பாகம் விலை ரூபா 1-8-0 தான்.
(241) தாருல் இஸ்லாம் புத்தகசாலை, சென்னை.

வாணியம்பாடி

(ஒரு நிருபர்)

வாணியம்பாடி தோனை மோதீன் பாச்சா சாஹிபுக்கும் வாணியம்பாடி முனிசிபல் சேர்மன் ஜனாப் ஹாஜிஅப்துல் ரகிமான் சாகிபுஅவாகளுக்கும் நடந்த கிரிமினல் கேஸின் தீர்ப்புவருமாறு:—

குப்பம் 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் அவர்கள் 54/28 செய்பர் கிரிமினல் கேஸில் சொன்ன ஜட்ஜ்மெண்ட்டு நகல்.

தொனை மொதீன் பாச்சா சாயபு—வாதி.

எதிரிகள்.

1. ஜனாப் ஆஜி அப்துல் ரகீம் சாயபு, 2. ஜனாப் எம். மௌலானா சாயபு, 3. ஜனாப் அப்துல் சுகூர் சாயபு, 4. ஜனாப் பாபு என்கிற அப்தல் அஜீஸ், 5. ஜனாப் அப்துல் மாலீக் சாயபு, 6. ஜனாப் அகமது சேன் சாயபு, 7. ஜனாப் சோடே சாயபு, 8. ஜனாப் அப்துல் அஜீம், 9. ஜனாப் அப்துல் கரீம் சாயபு, 10. ஜனாப் அப்தல் கனி சாயபு, 11. ஜனாப் வாணக்கார அப்தல்லா சாயபு 12. ஜனாப் பி. எஸ். அப்தல்வகாப் சாயபு மேற்படி கேஸ் திருப்பத்தூர் சப்கலெக்டர் கோர்ட்டிலிருந்து மேற்படி கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது.

எனவ குற்றத்தின் காரணத்தை வாதி கூறுவதாவது.—நான் ஆ. பாச்சாமியான் சாயபுடைய ஆள் மேற்படியார்ஒருதென்னந்தோப்பை ஒரு தென்னந்தோப்பில் 6-5-28 தேதி முதல்கொண்டு ஒரு குடிசை கட்டி வியாபாரம் செய்துகொண்டிருந்தார். நான் 12-5-28-ந் தேதி மாலை3-மணிக்கு தேங்காய்களை பாதுகாத்துகொண்டு மேற்படி குடிசையில் இருந்தேன். அப்பொழுது 3 வண்டி தேங்காய்கள் அந்த குடிசையில் தள்ளும் பொருட்டுவைத்தன. அந்த சமயத்தில் ஆற்றங்குப்பக்கத்திலிருக்கும் தென்னந்தோப்பிற்கு எதிரிகள் 50, 60 ஜனங்களுடன் வந்தார்கள். அதில் 1 முதல் 3 எதிரிகள் கையில் இரும்புதடி வைத்திருந்தார்கள். மற்ற எதிரிகள் கையில் தடிகள் (வண்டி சட்டங்கள்) வைத்திருந்தார்கள். 1 முதல் 3 எதிரிகள் இந்த தென்னந்தோப்பை விட்டு வெளியே போகும்படி என்னையும் வண்டிக்காரர்களையும் பயமுறுத்தினார்கள். அதற்கு நான் வெளியில் போட்டிருக்கும் காய்களையும் குடிசையையும் விட்டுவிட்டுப்போகமுடியாது என்றேன். பக்கத்தில் இருக்கும் எதிரிக்கு என்னை வெளியில் தள்ளும்படி முதல் எதிரி சொன்னார். இதற்குள் 4, 5, 6, 8 எதிரிகளும் என்னை அடித்து துன்பப்படுத்தினார்கள். அப்பொழுது கீழேவிழுந்துவிட்டேன். பிறகு 9முதல் 12எதிரிகள் என்னை தோப்புக்கு வெளியில் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். 3 தேங்காய் வண்டிக்காரர்களையும் பயமுறுத்தி வெளியில் துரத்திவிட்டார்கள். 145 இ. பி. கோ. பிரகாரம் போலீஸில் பிராதுசெய்த கேஸ் ஸ்ரீமான் திருப்பத்தூர் சப் கலெக்டரிடம் நடக்கிறது. மேற்படி கேஸ் நெ. 27. 28 இது விசாரணையில் இருக்கிறது.

இந்த சம்பவங்கள் நடக்கும் 5 நாளுக்கு முந்தி மேற்கண்ட தோப்பை இப்பிராஸிகியூஷன் 7வது சாக்ஷி 6500ரூபாய்க்கு வாங்கினார். முதல் எதிரி தனக்காக வேண்டி கிரயம்செய்யும்படி பி. 7வது சாக்ஷியைக் கேட்டார். அதற்கு அவர் மறுத்துவிட்டார். மறுத்ததின்பொருட்டு 1வது எதிரி விக்கிரயத்தாரிடம் 7000 ரூபாய் கிரயத்துக்கு வாங்கினார். கட்டாய சுவாதீனம் செய்துகொள்ளும் பொருட்டு 1வது எதிரி தன் கூட 50 ஜனங்களை கூட்டிகொண்டு பிராதில் கண்டபிரகாரம் செய்ததாகத் தெரியவருகிறது. 3 வண்டி தேங்காய்கள் 2-வது பி. சாக்ஷிக்கு சம்பந்தப்பட்டது. எதிரிகள் ஒவ்வொருவரும் அந்த சமயத்தில் நடந்த விஷயத்தைப்பற்றி பி. 3-வது சாக்ஷியும் சொல்கிறார். அன்றியே சில வேலையாய்ப் போய்கொண்டிருந்த பி. 4-வது சாக்ஷியும் சொல்கிறார். அதேபிரகாரம் பி. 5-வது சாக்ஷியும் சொல்கிறார். டி. சாக்ஷி 17-வதுயிடமிருந்து தோப்புவாங்கினதாகவும் அதற்குச் சேர்ந்த 4 வீடுகளும் மேற்படி கிரயத்தாரிடமிருந்து தனக்குச் சுவாதீனம் செய்ததாகவும், பி. 7-வது சாக்ஷி சொல்கிறார். அதற்குபின்புதான் தோப்பில் குடிசை கட்டப்பட்டது. 1-5-28-ல் இக்கிரயம் பேச்சு முடிந்தபிற்பாடுதான் 100 ரூபாய் அட்வான்சாகக்கிரயத்தாருக்குக்கொடுக்கப்பட்டது. செக்யூரிடி லெட்டர், பட்டா, பத்திரம், பாண்டு, இன்னும் மற்ற பத்திரங்களும் இவைகளை வைத்து 17-வது டி. சாக்ஷி குற்றுலம் பாச்சாமியான் சாயபுவிடத்தில் 2000 வாங்கியிருந்தார். மேற்கண்ட தொகையை செலுத்தி17-வது டி. சாக்ஷி மேற்படி கண்ட சிகார்டுகளை 7-வது பி. சாக்ஷியிடம் கொடுத்து 6-5-28ல் பத்திரம் எழுதினார். 7-5-28ல் கிரய பத்திரம் ரிஜிஸ்டர் செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். 7-5-28லும் 9-5-28லும் 10-5-28லும் பெண்கள் [illegible] கை யெழுத்து போடாததால் கிரயப்பத்திரம் ரிஜிஸ்டர் ஆகவில்லை. 1-வது எதிரி 17-வது டி. சாக்ஷியிடமிருந்து கிரயத்துக்கு வாங்கினதாகவும் பத்திரம் ரிஜிஸ்டர் ஆகப்போகிறதென்றும் பி. 7-வது சாக்ஷி கேள்விப்பட்டார். நடக்கல்லின்னப்பம் சப்ரிஜிஸ்டிரார் முன்னிலையில்தாக்கல்செய்யப்பட்டது. 1-வது எதிரி பக்கமாகவே பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. பி 8-வது சாக்ஷியும் இச்சம்பவங்கள் நடந்த தேதியிலும் பி 7-வது சாக்ஷியின் சுவாதீனம் இருந்ததாகச் சொல்லுகிறார். பி 6-வது சாக்ஷி 1-வது பி சாக்ஷிக்கு கொடுத்த சுவே சர்டிபிகேட் ஒப்படைத்திருக்கிறார்.

பிராஸிகியூஷன் சாக்ஷிகள்சொன்னபிரகாரம்1 வது எதிரி பி 7-வது சாட்சியின் சுவாதீனத்திலிருந்ததென்னந்தோட்டத்தை கட்டாய சுவாதீனம் செய்துகொள்ளும்பொருட்டு கிரய விரோதமான கூட்டம் கூடிக்கொண்டு ஷெ தோப்பில் அத்துமீறி நுழைந்து 1வது பி சாக்ஷியை காயப்படுத்தி 147,323 வது இ.பி.கோ. சட்டத்தின் பிரகாரம் குற்றம் செய்ததாக எதிரிகளுக்குப் படித்து காண்பித்ததில் எதிரிகள் குற்றம் செய்யவில்லை என்று வாதித்தார்கள்.

1.2. எதிரிகள் தாங்கள் 7-5-28 ல்12 வது டி சாக்ஷியிடமிருந்து வாங்கினதாகவும் அன்றைய தினமே வீடுகள் சுவாதீனம் செய்யப்பட்டு தோப்பு இவாதீனமாய் 1வது எதிரியின் ஆள்கள் ஏர் உழுதும் வேலியும் போட்டுக்கொண்டிருக்கும் போது பி- 1வது சாக்ஷி அக்கிரமமாய் 3வண்டி தேங்காய் கொண்டுவந்ததை 1 வது எதிரியின் ஆள்கள் தடுத்தனர் என்றும், 1 முதல் 6 எதிரிகள் மேற்கண்ட சம்பவம் நடக்கும் நேரத்தில் இல்லை என்று வாதிக்கிறார்கள். 7, 8-எதிரிகள் தன் எஜமானன் தோப்பில் 1வது பி. சாக்ஷி நுழையாதபடிக்கு தடுத்ததாகச் சொல்லுகிறார்கள். 9-முதல் 12 வரை எதிரிகளும் அப்படியே சொல்லுகிறார்கள். பி சாக்ஷிகள் டிபன்ஸ்னால் வெகு நேரம் வாதிக்கப்பட்டனர். 1வது பி. சாக்ஷி வாணியம்பாடி பேபிவீக் கமிட்டிக்கு செக்ரிடெரி 6-5-28 முதல் 8-5-28 வரையில் கொண்டாட்டம் நடந்தது. மேற்கண்ட தேதிகளில் பி 7வது சாக்ஷியின் கொட்டாய் காணப்படவில்லை என்றார். 8, 8. எ சாக்ஷிகள் ஒப்புக்கொண்டார். 12-5-28ல் காணப்பட்ட கொட்டாய் மேற் கண்ட கொண்டாட்ட தினத்தில் காணப்படவில்லை என்றும் வாணியம்பாடி சப் ரிஜிஸ்டார் சொல்லுகிறார். 1வது எதிரியின் சார்பாக ஒப்படைத்த காகிதம் 10-5-28 தேதிப்பு கிரைய விஷயமாய் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. 3வதுசாக்ஷி மேற்கண்ட கொண்டாட்டத்தில் பந்தோபஸ்துக்கு இருந்ததாகவும் 2வது டி. சாக்ஷியுடன் கலந்தார். டி. 4வது சாக்ஷி வாணியம்பாடி முனிஸிபாலிட்டியில் ஹெல்த் இன்ஸ்பெக்டர்17வதுடி.சாக்ஷியிடம் மேற்படி கொண்டாட்டம் நடந்த உத்தரவு கேட்டதாயும் கொடுத்ததற்கு முனிசிபாலிட்டியார் வந்தனம் அளித்ததாயும் 10-10-காகிதம் ஒப்புவித்தார். 5வது டி. சாக்ஷி மேற்கண்ட கொண்டாட்டம் நடந்தபின்புதான் கொட்டாய்ப் போட்டதாகவும் 1வது எதிரிக்கு கிரயத்தார் சுவாதீனம் செய்த பிற்பாடுதான் ஏர் உழுது வேலியும். 1வது எதிரியின் ஆள்கள் செய்ததாகச்சொல்கிறார். பி. 7வது சாக்ஷி கொட்டாய்ப் போடும்முன் தினமே 1வது எதிரியின் சுவாதீனத்திலிருந்ததாக டி. 6வது சொல்கிறார். 1வது எதிரியின் சார்பாக கிரயதாரியின் சம்மதியின்பேரில் எழுதியவாடகை பத்திரம் ஒப்புவித்தார்.

எக்சைஸ் அட்வைசரி போர்ட் மீட்டிங் நடந்த பிற்பாடு தன்னிடம் கூட 1வது எதிரி கலகம் நடந்த தினத்தில் மாலை 3-மணிவரையில் இருந்ததாக 7வது டி. சாக்ஷி சொல்கிறார்.

மேற்கண்ட மீட்டிங்கில் 1வது எதிரியும் 12-5-28ல் மாலை 1 முதல் 2-30 மணிவரையில் தன்கூட மீட்டிங்கில் இருக்கும்பிற்பாடு டி 7வது சாக்ஷியை காணப்போனதாக 8 வது டி. சாக்ஷிசொல்கிறார்.

1 வது எதிரியின் சுவாதீனத்தின் பின் பி 7.வதுசாக்ஷி கொட்டாய்ப்போட்டதாவும் 9வது டி சாக்ஷி சொல்கிறார்.

7வது பி சாக்ஷி கொடுத்தவாக்குமூலத்தையும் 1வது எதிரியின் சார்பாக 2வது எதிரி 144. இ. பி.கோ பிரிவின்படிகொடுத்த பிராதையும் 10வது டி சாக்ஷி சொன்னார். பி 1வது சாக்ஷியை யாதொரு துன்பம் படுத்தவில்லை யென்றும் அவ்விடத்தில் எவ்விதமான சம்பவங்களும் நடக்கவில்லை யென்றும் அவ்வழியே போய்க்கொண்டிருந்த 11, 12 சாக்ஷிகள் சொன்னார்கள்.

தன் எஜமான் 1வது எதிரியின் தோப்பில் பி 1வது சாக்ஷி நுழைந்து குடிசையில் தேங்காய்களைக் கும்பலாய் சேர்க்க வருவதைத் தெரிந்து 7 8எதிரிகள் அப்படி நுழையாதபடி தடுத்தார்கள். 1வது பி. சாக்ஷியை தோப்பைவிட்டு வெளிப்படுத்தும்படி 7, 8 எதிரிகளுக்கு உத்தரவாக 13-வது டி. சாக்ஷி போனதாகவும் அதற்கு உதவியாக 14-வது டி. சாக்ஷி போனதாகவும் சொல்லுகிறார். XI எ, பி. சி. ஆக வாடகை ரசீதுகள் ஒப்படைத்து 13-வதுசாக்ஷியுடன் கலந்தார். 16.வது சாக்ஷி 13-வது டி. சாக்ஷியுடன் கலந்தார். பி. 7-வது சாக்ஷிக்கு முதல் விக்கிரயம் செய்யக்கருத்தேயில்லையென்றும் 7000-ரூபாய்க்கு முதல் எதிரிக்கு கிரயம் செய்ததாகவும் சுவாதீனம் செய்ததாகவும் 17.வது டி. சாக்ஷி சொல்கிறார்.

1-வது பி. சாக்ஷியை அடித்தார்களா இல்லையா? அவ்விடத்தில் அடிதடிகள் நடந்தா இல்லையா என்பதைப்பற்றி கவனிக்கவேண்டியதே ஒழிய எதிரிகளாலும் டிபென்ஸ்களாலும் ஒப்படைத்த ரிகார்டுகள் அனாவசியமாயிருக்கிறது. மேலும் சம்பவம் நடந்த தினத்தில் தோப்பு யார் சுவாதீனத்தில் இருந்தது.அப்படி எதிரிகள் சுவாதீனத்திலிருந்தால் சுவாதீனத்தை ஸ்திரப்படுத்தினார்களா? சுவாதீனத்தைப்பற்றி கவனிப்போம். இது விஷயத்தைப் பற்றி கிரிமினல்கோர்ட்டார் கவனிக்க வேண்டியது இல்லை. ஒருவாராலும் மற்றவராலும் இது விஷயத்தைப்பற்றி 3 கேசுகள் நடக்கிறது. இ. பி.கோ. 145வது பிரிவின் படி திரு திருப்பத்தூர் சப் கலெக்டரிடம் நடக்கிறது. முனிசிபல்சேர்மென் ஓதலைக் கொண்டு 1-வது எதிரி 7-வது பி சாக்ஷி லைசென்சு இல்லாமல் கொட்டாய்ப் போட்டதாக வாணியம்பாடி பெஞ்ச கோர்ட்டில் கேஸ் நடக்கிறது. தற்கால கேஸ் 1-வது பி. சாக்ஷி செய்யப்பட்டது. 1 வது எதிரி முனிசிபல் கௌன்சிலர் வாணியம்பாடி, 2-வது எதிரி முனிசிபல் கௌன்சிலர் வாணியம்பாடி, 7-வது பி. சாக்ஷி இவர்கள் தான் இந்த கேசுக்கு முக்கியஸ்தர்கள்.

17-வது டி. சாக்ஷி 8-வது பி. சாக்ஷியுடன்தோப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதாகசாக்ஷிகளால் தெளிவாகதெரிகிறது. 17 வது டி சாக்ஷி சொல்வது திருப்திகரமாயில்லை. 7வது பி. சாக்ஷிக்கு நேராய் சுவாதீனம் செய்து மேற்கண்ட கொண்டாட்டம் நடக்கும் பொழுது கொட்டாய் இருந்ததாக பிராஸிகியூஷன் சாக்ஷிகள் சொல்கிறார்கள். டி. சாக்ஷிகள் அவ்விடத்தில் கொண்டாட்ட காலத்தில் கொட்டாய் இல்லையென்றும் முதல் எதிரிக்கு சுவாதீனம் செய்த பிற்பாடு தான் இருந்ததென்றும் சொல்கிறார்கள். இந்த சம்பவம் மேமாதமாய் இருக்கட்டும். 7வது பி. சாக்ஷிக்கு அந்த தினத்தில், சுவாதீனம் இருக்கிறதென்று நினைத்தார். 7 வது பி. சாக்ஷி கொட்டாய்ப்போட்ட காலத்தில் ஏன் தடுக்கக்கூடாது? 3 வண்டிதேங்காய்களை மாத்திரம் எதிரிகள் ஏன் தடுத்தார்கள்? பல சாக்ஷிகள் சொன்னதைதான் இஷ்டமாக எடுத்துக் கொள்ளவில்லை. 1-வது எதிரிக்கு கிரயம் செய்திருந்தால்கூட 7-வது பி. சாக்ஷி சொத்தை சுதந்திரத்துடன் அனுபவித்துகொண்டிருந்தார். அப்படியிருக்க 7-வது பி. சாக்ஷியின் சுதந்திரத்தை நீக்கும்படி 1-வது எதிரி சிவில் கோர்ட்டில் நடவடிக்கை எடுக்கவேண்டியது தோப்பு யார்சுவாதீனமென்று ஏற்படும் இந்த சச்சரவு காலத்தின் எதிரி 1-வது பி. சாக்ஷியை வெளியில் தள்ளி சொத்தை நியாயமாய் வசப்படுத்திகொண்டதாக வாதம் செய்கிறார்.

1-வது எதிரியுடன் 7, 8-எதிரிகளும் மற்ற ஆள்களும் பின் சென்றதாகவும், 1-வது பி. சாக்ஷியை தள்ளியதாகவும் கீழே விழுந்ததாகவும் காய சர்டிபிகேட்டில் கண்ட காயங்கள் பட்டதாகவும் தெரிகிறது. வண்டி சட்டங்களால் அடிப்பட்டு 1-வது பி. சாக்ஷி சமாளிக்க தப்பிக் கீழே விழுந்து விட்டார். 1-வது பி. சாக்ஷி காண்பித்த காயங்கள் வண்டி சட்டங்களால் அடிப்பட்டதாக இல்லையென்று மெடிகல் சாட்சியால் தெரிகிறது 1-வது பி சாக்ஷி கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக எதிரிகள் சொல்வது நிச்சயமில்லை. அவ்விதமான சச்சரவும் ஏற்படவில்லையென்று சொல்வதையும் நம்பவில்லை தோப்பின் சுதந்திரம் இன்னும் ஏற்படவில்லையென்றிருக்கும் அதனால் தங்களை காக்கவேண்டியது தீர்க்கவேண்டிய அவசியமில்லையென்று அறிந்திருக்கும் இக்காரியத்திற்கு முன்னிட்டதால் மேற்படி 7, 8, எதிரிகள் 352 இ.பி. கோ. பிரிவின்படி குற்றவாளிகள்.

1-முதல் 6 எதிரிகளும் குற்றம் செய்ததைப்பற்றி பி.சாட்சிகள் வாதிக்கவில்லை பி. சாக்ஷிகள் சரியாய் சொல்லவில்லை. எப்படியிருந்தாலும் எதிரிகள் கலம்பு செய்ததாக மொத்த சாக்ஷிகளால்தெரியவருகிறது. எதிரிகளுடைய டிபன்ஸ் சாக்ஷிகளால் கேஸ் ருஜு ஆகவிட்டாலும் ஏற்பட்ட நிர்மாணத்தைத் தள்ளிவிட முடியாது.

1-வது எதிரி இந்த சம்பவதினத்தில் இருப்பத்அங்கே இருந்ததாக சொல்வதை மறுத்த சரியான சாக்ஷிகள் இல்லை. ஆனால் டி. 7, 8 சாக்ஷிகள் மரியாதையுள்ளவர்கள் அவர்கள் சம்பவதினத்தில் 1-வது எதிரி எக்சைஸ் அட்வைசரி மீட்டிங்கில் மாலை 3-மணி வரையில் இருந்ததாக சொல்கிறார்கள். ஆனால் அன்றையதினம் அவ்விடம் 1-வது எதிரி இல்லையென்பதைப்பற்றி விசார்செய்ய இஷ்டமில்லை. ஆனால் 1-வது எதிரி சம்பவதினத்தில் மாலை 4மணிக்கு மோட்டாரில் திரும்புவதற்கு சாத்தியமே ஒழிய இல்லையென்று ஒருவராலும் சொல்லமுடியாது. ஆனால் 7வது டி. சாக்ஷி வாணியம்பாடி முனிசிபாலிடி வக்கீல் 1-வது எதிரி முனிசிபல் சேர்மன் டி. 8வது சாக்ஷி முதல் எதிரிக்கு [illegible] டி. சாக்ஷிகள் சொல்வது 7 8 எதிரிகள் தோப்பில் இருந்ததாகவும், 1-வது பி. சாக்ஷியை வெளியில் தள்ளியதாகவும் டி. சாக்ஷிகள் சொல்கிறார்கள். மற்ற விசாரணையில் பி. சாக்ஷிகள் தலைகீழாய் சாக்ஷியம் சொன்னார்கள். ஆகையால் 7, 8 எதிரிகள் தவிர மற்றவர்களின் பேரில் சந்தேகம். மேலும் சட்ட விரோதமான கூட்டம் கூடியதா இல்லையா என்பதை கவனிக்குங்கால் அது பிரயோஜனப்படவில்லை. ஆகையால் 7, 8 எதிரிகள் கொடுத்த வாக்குமூலத்தை நான் நம்பவில்லை. 1வது பி. சாக்ஷியைத்தள்ளியதாக சொன்னதையும் நம்பவில்லை.

ஆகையால் பி சாக்ஷிகள் 1 முதல் 6 வரை 9 முதல் 12 வரை எதிரிகள் குற்றம் 147 அன்டு 323 இ. பி. கோ. சட்டத்தின்படி சரியாய் ருசுப்படுத்தாதினாலும் சந்தேகத்தின்பேரில் தள்ளிவிட்டேன். 352 இ. பி. கோ. பிரகாரம் 7, 8 எதிரிகள்குற்றவாளிகள், ஆகையால்அவர்கள் நபர் ஒன்றுக்கு 30 ரூபாய் அபராதமும் தவறினால் 1 வார கடினகாவல் தண்டனையும் கொடுக்கப்பட்டது.

(ஒப்பம்) செல்லாராமைய 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் 28-9-28.

திருச்சி.

"நால்வர் தம் மறை பரப்புதற்கே நந்தமிழ் நாட்டிடை நடிக்கும்"

சைவசமயவாதிகள்

இவைகட்சென்னசொல்லுகிறார்கள்

20—10—28

மேலே கண்ட கேள்விகளைத் தண்டு ப்பிரசுர மூலமாய், 16-10-28 திருச்சி சைவசித்தாந்த சபையில் திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையில் திருவாளர் மு. சரவணமுதலியாரவர்கள் சொற்பொழிவுநிகழ்த்திய கூட்டத்தில் கேட்கப்பட்டன. இவ்வைபவிருக்கட்குப்பதில் கூறநேரமில்லை யென்றும் சில வினாக்களுக்குப்பதில் கூறமுடியாதென்றும் சில வற்றிற்குக் கூறக்கூடாதென்றும், தலைவரவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே மறு நிகழ்ச்சியிலாவது இக்கண்டவைகளுக்கு பதில் சொல்லுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

1. சைவத்தில் சமார்த்தக் கதைகளும் வாலாறுகளும் இல்லை யென்று உறுதி கூறமுடியுமா? அவைகளை நீக்கிவிட்டால் சைவ சமயத்தில் எஞ்சிநுள்ள பகுதி எவ்வளவு?

2. பெரிய புராணம் சமரசத்தையும் சாதியொற்றுமையையும் புகட்டுவது உண்மையாயின் நீண்டப்படாதவர்களென்று கூறப்படுபவர்களைப் பற்றி சைவர்கள் கருத்தென்ன? இன்றளவா எவ்வளவு சைவர்கள் அய்வேதாந்தமின்றி செய்கையில் காட்டியிருக்கிறார்கள்?

3. அன்பு சமயத்தை (சைவம்) நிலை நாட்டவந்த ஞானசம்பந்தர் சமணரைக் கழுவேற்றியது பற்றி, சைவசமய வாதிகளுக்குள் பலவித தமோற்றங்கள் நேர்ந்தவானேன்? அதன் உண்மை என்ன?

4. "பறப்பைப் படுத்தெங்கும் பசு வேட் டெரியோம்புஞ் சிறப்பர் வாழ் தில்லைச் சிற்றம்பலமே" என்று கூறியதால் ஞானசம்பந்தர் உயிர்ப்பலி யாகத்தை ஏற்றுக்கொள்கிறாரா? உயிர்ப்பலி யாகத்தைக் கண்டித்த இராவணைப் பெருந்தகையை, 'இராவணன் மேலது நீறு' என்று முரண்பாடாகப் போற்றலானேன்?

5. "சைவசமயாச்சாரியர்கள், "தொண்டர் காதலைத் தாலிட்ட விடுத்ததும், முதலையுண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண்ணுருவாக் கண்டதும் மறைக்கதவினை திறந்ததும்" போன்ற பல அற்புதங்களை செய்திருக்கத் தற்காலத்துச் சைவர்களும், தமிழ்ப் போதிஞர்களும் இன்று அத்தகைய ஒரு அற்புதமாவது காட்டுவார்களா?

6. பொதுமறை எழுதிய திருவள்ளுவரை சைவவேடம் (உருத்திராக்கம், திருநீறு) புனைந்த விதமாய்த் தீட்டியிருப்பது, பொதுமறையென்று போற்றும் ஏனையோரையும் ஆசிரியரையும் அவமதிப்பதல்லவா?

7. "உலகெலாம்" என்றும் "தில்லைவா ழந்தணர்தமடியார்க்கு மடியேன்" என்றும் அடியெடுத்துக் கொடுத்த இறைவன் வேறு எந்த மொழிகளில், எந்த காலங்களில் எந்த மதத்தினர்க்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கிறார்? இல்லையாயின் ஏன்?

8. திருநீறு, உருத்திராக்கம், சிவபூசை முதலானவைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் சைவர்களாயிருக்க முடியுமா?

CHEMICAL DIAMONDS.

Guaranteed hardness and brightness, Equal to Genuine Diamonds, Prices, Rs. 5. to Rs. 10. Per carat.

Full Particulars; Apply to American Chemical Diamonds Co., 3, General Muthiah Mudali Street, Madras.

Tel: "Thejus". (191)

அரபிகள் அட்டூழியம்.

மோட்டார் ஓட்டி கொலை.

போலீசாரால் போலீசார் கொலை.

[illegible]

... விரைவாய் நடத்திச் சென்றான். ஆனால், ஜெரிசியின் பெட்சன் போலீஸில் குண்டேபட்டுதவாமுண்டானதால்ஜெரிசி நின்று விட்டது. அரபிகள் உடனே அவர்கள் தப்பி ஓடிவிடாமல் வழி மறித்து ஜெரிசி டிரைவர் தான் காலுயின்னைகளுக்கு தகப்பன் என்றும் தன்னைக் கொல்லாமல் விட்டுவிடவேண்டுமென்றும் கெஞ்சியும் அதற்கு இணங்காமல் அவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு அந்த இரண்டு மாதர்களிடமிருந்த பணத்தை பறித்துக்கொண்டு அவர்கள் இருவரையும் தங்களோடு வரும்படி பலவந்தமாய் அழைத்துக்கொண்டு ஓடிவிட்டனர்.

போலீஸார் துரத்திச் சென்றனர். அதற்குள்ளாகவே பொமரான் என்ற வியாபாரி தமது குதிரையிலிருந்து கீழேவிழுந்ததில் காயமடைந்தார். இரண்டு போலீஸ்காரரும் ஜுலிட்டுகா என்ற வர்த்தகரைக் கட்டிக்கொண்டு தப்பியோடிவிட்டனர். போலீஸ்காரரில் இரண்டுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இது இன்னொரு கூட்டம் போலீஸ்காரர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் ஏற்பட்ட விபத்தாயிருக்கலாமென்று சொல்லப்படுகிறது.

புதிய சீனு

ஹென்றி போர்டிடம் கடன்

நியூயார்க், அக். 22

ஹென்றி போர்ட் அன்னிய நாடுகளுக்குக்கடன் கொடுக்கிற தொழிலை மேற்கொள்ளுவாரென்று தெரிகிறது. சீனுவின் சீர்திருத்தச்செலவுக்காகப்பண வுதவி செய்யவேண்டுமென்று ஹென்றி போர்டையும் வேறு சாது அமெரிக்க லேவாதேவிக்காரரையும் நான்கிங் தேசியக் கட்சியினர்கள் கேட்டிருக்கிறார்கள்.

திரு. ஹென்றி போர்டு இது விஷயமாய்ப் பேசுகையில் தமக்கு அப்படி ஒரு கடிதமும் கிடைக்கவில்லை யென்றும், அப்படி கடிதம் கிடைத்து அது திருப்திகரமாயிருந்தால் தான் அதை ஒப்புக்கொள்ளத் தயாராயிருப்பதாகவும் கூறுகிறார்.

இக்கடிதங்களையும் சீனுவில் சில அமெரிக்க என்ஜினியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதையும் சேர்த்துப் பார்த்தால் நான்கிங் சர்க்கார் அமெரிக்கா விடம் சமீபத்தில் கடன் கேட்பார்களென்று தோன்றுகிறதென்று வால் வீதி அமெரிக்க பண லேவாதேவிக்காரர்கள் கருதுகின்றனர்.

"அன்பே சிவம்" என்பதன் கருத்தென்ன?

9. சமயம், விசேடம், நிர்வாணம், ஆசாரியபிஷேகம் முதலிய தீட்சைதள் சைவர்களுக்கு அவசியமா? இவைகள் வடமொழியில் இருப்பதற்குக் காரணமென்ன? இவை சந்தமிழ்மொழியிலும் உண்டா?

10. சமய சமூகச் சீர்திருத்தக்காரர்கள், வள்ளலும், மறைமலை போன்ற பிற சமயங்களிலுள்ள குற்றங்களைக் கண்டிக்கும்காலத்து, சைவர்களிலுள்ள ஆராய்ச்சி வல்லுனர்களும், அறிஞர்களும் [illegible]

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

கும்பகோணம்

(நமது விசேஷ நிருபர்)
20—10—28.

1

காலநிலை:—எங்கும் இரண்டு மூன்று நாட்களாக மழை பெய்து வருகிறது.

கவர்னர் விஜயம்:—சென்னை கவர்னர் லார்ட் கோஷன் அவர்கள் 31ந் தேதி இங்கு விஜயஞ் செய்து தாலுக்கா போர்டு கட்டிட அஸ்திவாரக்கல் நாட்டப் போகிறார். அது சமயம் முனிசிபாலிட்டியாரால் உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்படும்.

முனிசி பாலிட்டியும் ரோடுகளும்:—நடைத்தெரு பழயசாமினோ தெரு வடக்கு டியான தெரு முதலிய ரோடுகள் சுமார் [illegible] அடி சேர்க்க தேங்கி நாற்றமெடுத்தும் நடக்க யோக்கியதையற்றும் நகரின் முக்கியமுள்ள பல இருக்கிறதுவடைத்தெரு சோட்டில் சில இடங்களில் ஆறு அடி [illegible] பள்ளங்களிருப்பதால் வண்டிக்காரர்களுக்கு பொதுஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள்.

காவேரியும் தோணியும்:—நகர் மேலக் காவேரியில் தோணியைக் கடக்கபேருக்கு காலணா வாங்கிவருகிறார்கள். ஆனால் விளம்பர பலகையில் பைசா ஒன்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து தக்கது செய்வார்களா.

கன்னிகா பரமேஸ்வரி கோயில் பிளான்சிட்டு:—பிளைஸ்கள் 17-9-28 18-9-28-ந்தேதியும் எடுக்கப்பட்டது. முதல் பிரைஸ் கும்பகோணம் வடசரப் எ. ஆர். வெங்கடாசம செட்டியாருக்கு ரூ 1250 ம் இரண்டாவது பிரைஸ் உலகடம் போஸ்ட் நாவப்பட்டு புவானி வி. கே. அருணாசலமய்யருக்கு ரூ. 500 ம் சேலம் வியாபாரி கே. ஆர். சீனிவாச செட்டியாருக்கு மூன்றாவது பிரைஸ் ரூ. 250 ம், அபிஸ்தலம் ஆர். கோவிந்தசாமி அய்யருக்கு ரூ. 125ம், மேலக்காவேரி ராஜா முகம்மது ராவுத்தருக்கு ரூ. 62-8 ம் பொன்னமராவதி தனக்கோட்டி சுப்பிரமணிய செட்டியாருக்கு ரூ. 62-8-0ம் இன்னும் அநேக சின்னஞ் பிரைஸ்களும் விழுந்திருக்கிறது.

2

பிராமணரல்லாதார் கவனிப்பாரா?

முனிசிபாலிட்டியில் தற்சமயம் ஒரு பார்ப்பனரல்லாதார் வைஸ் சேர்மனாயிருந்து வருகிறார். மேற்படி ஸ்தானத்திற்கு சமீபத்தில் எலெக்ஷன் நடக்க வேண்டியிருக்கிறது. தற்சமயம் வைஸ்சேர்மனாயிருந்து வருபவர் சமீபத்தில் தான் நடந்த கௌன்சிலர் எலெக்ஷனில் வெற்றி பெற்றார். அது சமயமே மேற்படியாரை தோல்வியடையச் செய்ய பகிரத பிரயத்தனஞ் செய்தனர். அது பலியாதது கண்டு வைஸ் சேர்மன் எலெக்ஷனில் நம் பிராமணரல்லாத தலைவர்களை இருபிளவாக்கி பிராமணர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க அநேக சூழ்ச்சிகள் செய்து வருவதாய்த் தெரிகிறது. இதை யறிந்தாவது நமது தலைவர்கள் ஒத்துமையுடனிருந்து காரியங்கள் செய்ய வேண்டியிருக்க பார்ப்பனர்களுடன் உறவாடி வருகின்றனர். சென்ற சில ஆண்டுகளாக 'பார்ப்பனரிடம் உறவாடியதன் பயனாக முனிசிபாலிட்டி தாலுக்கா போர்டுகளின் சமீப கௌன்சிலர்கள் தேர்தல்களில் உயர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டும், புத்தி கற்பிக்கப்பட்டும், அவகுறியமாயிருந்து வருகிறார்கள். பிராமணர்கள் அடுத்த அருடம் வரப்போகும் சேர்மன் எலக்ஷனுக்கு தற்பொழுதே பிராமணரல்லாதார்களுள் பலகைமையை உண்டாக்கி தங்களினத்தவரை சேர்மனுக்க அடிப்படையான வேலைகள் செய்து வருகிறார்கள். பிராமணர்களுக்கு அவர்கள் சார்பாயிருப்பவர்கள் போலவும் பிராமணரல்லாதார்க்கு அவர்கள் சார்பாயிருப்பவர்கள் போலவும் காட்டிவந்த தலைவர்களுக்கு பிராமணர்களாலேயே புத்தி கற்பிக்கப்பட்டுவிட்டது. இனியாவது நம்மினத்திலேயிருக்கும் உழைப்பாளர்களோடு ஒற்றுமையாக ஜெயமடைவதுடன் பிராமண ராஜ்யத்தை வோசகிக்கவியமுடியும் இனியாவது நமது தலைவர்கள் வேலைசெய்வார்களா என்று ஓர் அபமானவாதை யபிமானி எழுதுகிறார்.

3

வாலிப நாடார் சங்கம்

நாடார்குல திலகங்களே:—

சென்ற, 1927-ம்வருஷம் அக்டோபர் மாதம் 1, 2, 3-ந் தேதிகளில் நடந்த நாடார் 11-வது மகாநாட்டின்கண் 2-ம் நாள் நிறைவேற்றிய 6, 7 தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பெற்றது நீங்களறிந்ததொன்றே.

6-வது தீர்மானம்:—நமது ஜனசமூகத்தில் ஒவ்வொருவர் வீட்டிலும் நடக்கும் சுப, அசுப, காரியங்களை நமது குலத்தவர்களையே கொண்டு நடத்த வேணுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

7-வது தீர்மானம்:—நமது சொந்த ஆலயங்களில் நமது குலத்தவர்களையே அர்ச்சகராக நியமிக்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பெரியோர்களே! சமயிலுள் வழக்கம், வழக்கம், என்னும் கொடிய கொள்கையின் பயனுய் ஆறறிவுள்ள மனித தர்மத்திற்கே விஞ்சித்தப்போவதலும், அர்த்த மற்றதும், பயனற்றதுமான பாழும் பார்ப்பனீயப் புரோகித கொள்கைகள் என்னும் பிசாசை இதுபோழ்து நம் மாபெரும் தமிழ் மக்களின் அரும் தவப்பயனுய்க் கிடைத்திருக்கும் அரிய சஞ்சீவியாம் "சுயமதிப்பு" என்னும் கூரிய வெற்றி வீரவாளால் அறவே சேதிக்கெதிய பின் வாங்குவீர்களையானால், உத்தனல் வினைபுமூன்றுவகைப் பெரும் பதத்திற்கானவீர்களென்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!!

1. கடலூல் சுமார் பதின்மூன்று வெட்சம் ஜன சங்கியைக்குப் பிரதிநிதி சபையாய் விளங்கும் நம் மதுரை நாடார் மகாஜன சங்கம் கட்டளையை அலட்சியம் செய்தல்.

2. தங்களோடல்லது இனி எதிர்காலத்தில் இவ்வுலகத்தினராயிருக்கப்புகும், தங்கள் மாசற்ற புத்ர ரத்தினங்களாகிய இளஞ்சிங்கங்களையும் இக்குருட்டு நம்பிக்கையில் என்றென்றும் மீளா அடிமை வாழ்க்கையில் புகுத்த கருவியாயிருத்தல்.

3. தன்னலமா விழிப்படைந்தும்; ஊரார் என்ன சொல்லுவார்களோ உறவினர் என்ன நினைப்பார்களோ என்னும் மதிமயக்கத்தினால் கலக்க முற்று தெய்வ சங்கல்பத்தால் நேரிய வழி பற்றி நடக்கத் திறக்கப்பெற்ற தங்கள் மனக்கண்ணையும் 'சந்தர்ப்பம்' என்னும் கொடிய அடிமைச் சக்தியால் கட்டுவித்து அந்தகாரத்திலமிழ்த்த முற்படுதல்.

கண்ணியவான்களே! கடையோகமாக உங்கள் ஒவ்வொருவரையும் நயந்துக்கேட்டுக்கொள்ளுவதொன்றுண்டு. எங்கள் வேண்டுகோளை தங்கள் மனமென்னும் உயரிய நிராசினுல் நிலக்குசெய்து நன்றொனுதோர்ந்திவுடனேயே நம்சமூகம், புகர், ஆன்ம, ஆகிய மூவகையின் விடுதலைக்கும் ஆதரவளிக்கத் தடங்காது, நம் குலவீரத்திற்கேற்ப செய்கையில்செய்து காட்ட முன்வருங்கள் என சங்கக் காரியக்கமிட்டி அங்கத்தினர்களேயிசி. ரும சந்திர நாடார் எல். அருணசாமி நாடார் வி. சின்னதம்பி நாடார் எழுதுகின்றனர்.

போத்தனூர்.

பொள்ளாச்சி திண்டுக்கல் ரயில்வே.

(நமது நிருபர்)

பொள்ளாச்சிக்கும் திண்டுக்கல்லுக்கும் போடப்பட்டுக்கொண்டிருந்த ரயில் பாதையை நேராக இணைத்துவிட்டார்கள் சம்பி வண்டிகள் (பாலஸ்ட்) இப்பொழுது நேராகப் போகக்கூடும். ஜனங்களை ஏற்றிச்செல்வதற்குப் பாதை லாயக்காவென்று பரிசோதித்து உத்திரவு கொடுப்பதற்காக கவர்ன்மெண்ட் இன்ஸ்பெக்டர் நவம்பர் மாதம் 6, அல்லது 7ந்தேதி பார்வையிடுவார். பார்வையிட்டபின் வண்டிகள் ஓட்டுவதற்குவேண்டிய ஏற்பாடு செய்யப்படும். மதுரை-போடி நாயக்கனூர் ரயில்பாதையையும் மேற்படி இன்ஸ்பெக்டர் நவம்பர் மாதம் 5ந்தேதி பார்வையிடுவாரெனத் தெரிகிறது.

போத்தனூர் ரயில் பட்டரை:-போத்தனூர் ரயில் பட்டரையை பாக்டரி இன்ஸ்பெக்டர் 19ந் தேதி வெள்ளிக்கிழமை பார்வையிட்டார்.

ரயில் பாதை பரிசோதனை:—தென் இந்தியா ரயில்வேயைச் சேர்ந்த பெரிய ரயில்டங்கிய பாகங்களை கவர்ன்மெண்ட் இன்ஸ்பெக்டர் மங்களூரிலிருந்து 28ந் தேதி துவக்கி பார்வையிட்டு ஈரோட்டில் நவம்பர் மாதம் 3ந் தேதி முடிப்பார். அக்டோபர் மாதம் 31ந் தேதி போத்தனூர் பட்டரையைப் பார்வையிடுவாரென அறிகிறேன்.

கற்பழித்தல்:—திருப்பூரிலிருந்துவந்த ஒரு இளம்பெண்ணை போத்தனூரில் கற்பழித்துவிட்டதாக செய்தி வந்ததையே வெளிவந்ததைப்பற்றிப்போலீசார்தருத்த சாட்சி இல்லையென்பதாகத் தள்ளிவிட்டதாகத்தெரிகிறது. ஆனாலும் ரயில்வே சம்பெனியார்தாங்களாக ஒரு ஆபீசரைக்கொண்டு விசாரணை செய்திருப்பதாகத் தெரிகிறது. அதன் முடிவு தெரியவில்லை.

தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர்கள்:-[illegible] இவ்விருந்து ராஜிநாமா செய்து பணம்பெற்றுக்கொண்டவர்களில் பலர் பொன்மலையில் தாங்கள் வாங்கின தொகைகளைத் திருப்பிக்கொடுத்துவிட்டு வேலையில் சேர்ந்து பார்த்துவரும் அவர்களின் ஒரு சிலரை [illegible] வேலைகளிலிருந்து போருடைய உத்திரவிட்டு [illegible] அனுப்பி விட்டார்களாம். இவர்கள் சங்கத்தில் வேலை செய்த [illegible] மேஜர் [illegible] ஆதலால் ஜனங்கள் [illegible] அதவண்ணமாகிறது.

சேலம்.

முனிசிபல் கூட்டம்

மேட்டுப்பட்டியிலிருந்து குடி தண்ணீர் சப்ளை (20—10—28)

இன்று காலை 8-மணிக்கு சேலம் முனிசிபல் [illegible]

1. இப்போதைய [illegible]

2. இந்த முனிசிபாலிட்டியின் [illegible]

3. இந்தக் குடி தண்ணீர் சப்ளை [illegible]

மதுரை.

(நமது சொந்த நிருபர்)

இராமநாதபுரம் ஜில்லா:—[illegible]

தென்னிந்திய மருத்துவர் மூன்றாவது கான்பரன்ஸ்

முதலாவது அறிக்கை.

அன்புமிக்க மருத்துவ சகோதரர்களே! [illegible]

[illegible] மகாநாட்டு விஷயமாய் யோசனை செய்வ[illegible]

ஆதிதிராவிடர்கள் மகாநாடு

1928ம் வருஷம் அக்டோபர் மாதம் 21ந் தேதி [illegible]

குடி அரசு
பத்திரிகை.

நமது திராவிடன் ஆபீஸில் கிடைக்கும். விலை 0 1 0

[illegible] அலங்காரம் செய்தார்[illegible] திருவாளர் பி[illegible] ராமைய்யா அவர்கள் வந்தனோபசாரம் செய்த மேளவாத்தியத்தோடு இனிது முடிந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஓர் வாலிபனது தீரச் செய்கை.

முகத்துவாரத்தின் குறுக்கே நீந்தல்.

சென்னை, அக், 21

கடந்த சில நாட்களாக ஏராளமான மழை பெய்தபடியினால் மைலாப்பூரின் கண் பற்பல இடங்களில் தண்ணீர் மிகுதியாய்த் தேங்கி குடிசைகளுக்கும் சிற்சில கட்டடங்களுக்கும் நஷ்டமுண்டாக்கக்கூடியதாயிருந்தது. இதையறிந்த அரசாங்கத்தார் பிற்பகல் சுமார் 2-மணிக்கு முகத்துவாரத்தை வெட்டினார்கள். மைலாப்பூர் யூனியன் போர்டு மெம்பர்களில் சிலரும் நானும் அம்முகத்துவாரத்தைப் பார்ப்பதற்குப் பிற்பகல் 4-மணிக்கு சென்றோம். இன்னும் அநேகரும் அவ்விடத்தில் சூழ்ந்திருந்தனர். அங்கு சொல்லுதற்கரிய அலைகளுடன் தண்ணீர் ஏராளமாய் செடி, கொடிகளையும், மரத்துண்டுகளையும் வேகமாய் அடித்துக்கொண்டு வெள்ளப்பிரவாகமாயிருந்தது. பார்ப்பதற்கு பயங்கரத்தைக் கொடுக்கக்கூடிய அங்கோரத்தில் சுமார் 4-30 மணிக்கு அடையார் நிவாசபிக்கல் சொசைட்டியிலிருக்கும் சுமார் 22வயதுள்ள மணி யென்னும் பெயர் புனைந்த வாலிபன் அம்முகத்துவாரத்தைக் குறுக்கே நீந்தி அலைகளுடன் அடிப்பட்டு சாமர்த்தியமாய் அக்கரை ஏறினான். நாங்களும் இதர ஜனங்களும், மீன் பிடிப்பவர்களும், அவன் பிழைத்து கரையேறுவது துர்லபமே என்று நம்பியிருந்தோம். அவன் தீரச்செய்கையே ஆச்சரியமே என யூனியன் போர்டு காரியதரிசி எழுதுகிறார்.

ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனவரை கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியவை எழுதப் பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஆரியன் லைசிக் இன்ஸ்டிடியூட், சௌகார்பேட்டை, மதராஸ்.

(118)

திராவிடன்

சந்தா விபரம்.

மாதமொன்றுக்கு	ரூ.	1	6	0
சென்னையிலும் ஜில்லா உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு	ரூ.	1	0	0
அயல் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு	ரூ.	18	0	0
தனிப்பிரதி	விலை அணா	0	0	6

டி. மீரான் தையற்கடை.

இங்கு ஷர்ட்டுகள், சூட்டுகள் வெகு நேர்த்தியாக நவீனமுறையில் தைத்துக் கொடுக்கப்படும். குறித்த காலத்தில் கிடைக்கும். மகாராஜாக்கள், பிரபுக்கள், ஏழைகள் முதலியோர்கள் எங்கள் கம்பெனிக்கே ஆர்டர் கொடுக்கிறார்கள். ஒரு முறை பரீக்ஷித்துப்பாருங்கள் உண்மை தெரியவரும்.

(252) 8. ராட்டன் பஜார், பார்க்டவுன், மதராஸ்.

அநேக டாக்டர்களாலும், பல பிரபுக்களாலும், வைத்திய கான்பரன்ஸ்களிலும் பரிக்ஷிக்கப்பட்டு தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டம் பெற்றவர்!!!

பழநி. சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்.

சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

இது அபார சக்தி வாய்ந்தது. குஷ்டம், மேகம், க்ஷயம், இயிர், சூலை, சொறி, மரமதப்பு, பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆறாத குழிப்புண், பவுத்திரம், கண்டமாலை, முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும்.

வி. பி. வேத.

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50. 50 வேளை ரூ. 25.

ஏழைகளுக்குப் பாதி விலை.

அசல் வெள்ளி பஸ்பம்.

காட்பட்ட வெள்ளை, வெட்டை, அஸ்திவெட்டை, தந்திமேகம், நீரோடு விந்து கலந்து போதல், சிறுக்கிருமல், இருமல், வெட்டை வாய்வு இடுப்புவலி, சரீரம் இளைத்து சதாகாலமும் காம்போல் சூடு தாங்கியிருத்தல், கால், கை, கண், முதலிய இடங்களில் எரிச்சலுண்டாதல், நீலகற்றல், இவைகள் நீங்கி தேகத்திற்கு நல்ல பலத்தையும், தாதுபுஷ்டியையும் நல்ல ரத்த ஓட்டத்தையும் உண்டுபண்ணும். பெருமுறை பஸ்பம் ஒரு மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 15. 24-நாள் பஸ்பம் ரூபா 7—8—0 தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

சித்த ஆயுள் வேத வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி

நித்தியானந்த வைத்தியசாலை பழநி.

(61 பி)



"நுதித்த நவமணியில் கிடைக்க வேண்டுமானால்" கீழே குறிப்பிட்ட விலாசத்துக்குப் போங்கள். மூக்குத்திருகு முதற்கொண்டு எவ்வளவு விலை உயர்ந்த நகை வேண்டுமானாலும், அசல் சவரப் பொன்னுக்கும் சிமை வெள்ளிக்கும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கை இருப்பில் அநேக நகைகள் இருக்கிறது.

உம்முடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பெனி,
நகை தொழிலாளர்கள், 25, கைகுபஜார் ரோட், மதராஸ்.
தந்தி:—"உம்மிடியார்" டெலிபோன் 2802.
(118—பி.)

64 பக்கம் 64

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கங்கள் விஷயங்களுடன் வெளியாகிக் கொண்டிருந்த "ஆனந்த விகடன்" இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கம் உள்ள விஷயங்களுடனும் ஏராளமான சித்திரப்படங்களுடனும் வெளிவரும் என்பதை நண்பர்களுக்கு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சிறந்த எழுத்தாளர்களிடமிருந்து கட்டுரைகள் வெளிவரும். வேடிக்கையும் விகடமும் அதிகமாக இருக்கும். 64 பக்கங்கொண்ட நமது ஆனந்த விகடனுக்கு வருஷசந்தா ஒரே ரூபாய்தான். ஆனந்த விகடனிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு தம்பி செலவாகுமென்று எழுதுகிறார் ஒரு நண்பர். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768 பக்கங்களுக்கு ஒரு தம்பி கொடுக்கக்கூடாதா?

இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருஷ சந்தா தபால் கூலியுள்பட ரூ. 1-0-0
மாதிரி காப்பி இனும்! அயல்நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1-4-0

விலாசம்:—"ஆனந்த விகடன்" ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.
(112எ) தந்தி விலாசம்:—"விகடன்" சென்னை. டெலிபோன் நெ. 3311.

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

போலிச்சரக்குகளை வாங்கிமாறு ஏமாறாதீர்கள்

பலவிதமான டவல்கள், அங்கவஸ்திரங்கள், ஜமக்காளங்கள், தோவதிகள் முதலியவைகளுக்கு S. R. S. டிரேட் மார்க்கே சிறந்தது. ஆகையால் வாங்கும் பொழுது S. R. S. மார்க்கைப் பார்த்து வாங்கவும். ஏஜெண்டுகள் வேண்டும். S. R. S. டவல் என்று சொன்னால் போதும்.

S. R. சுந்தரமய்யர்,
ப்ரொப்ரைட்டர்,
194 தென்னிந்தியா நெசவுச்சாலை, கும்பகோணம்.

இதை நன்றாய் கவனிக்கவும்.
வெகுநாளாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தமிழ் பிளேட்டுகள் வெளிவந்தன. குறைந்த விலை! ஆர்டருக்கு முந்துங்கள்!!

சொற்ப பெட்டிகளே கைவசம் உண்டு.

25 வருஷம் 1 டியூனுள்ள சிறியது, ஹாரன் பெட்டி உள்பட ரூ. 1, பெட்டி விலை	... ...	ரூ. 6 0 0
...	... ...	ரூ. 0 14 0
இதில் நெ. 2, பெரிய பெட்டி ...	... ...	
1 டியூன் ...	... ...	ரூ. 18 0 0
1 தனி சிறியது விலை ...	... ...	ரூ. 3 0 0

10 வருஷம் காரண்டி உடையது.

இதை வேண்டுவோர் அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷனையும் 3-ல் 1-பங்கு அட்வான்சும் அனுப்பவேண்டும். அப்படி இல்லையேல் ஆர்டரை கவனிக்கமாட்டோம்.

விலாசம்;— மெயில் ஆர்டர் வாச் அவுஸ்,
(219, ஏ.) பழைய வண்ணாரப்பேட்டை, போஸ்டு, மதராஸ்.

உலக பிரசித்தியான சோதிடர்.

உங்கள் எதிர்கால சம்பவங்களைப்பற்றிய 5 கேள்விகளை விவரமாக எழுதியனுப்பினால் மறு தபாலுக்கே தக்க பதில் எழுதி அனுப்புகிறோம். வருஷப்பலன் முதலியவைகளும் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம் ஏதாவதொன்றைக் குறித்தனுப்பவேண்டும்.

4 கேள்விகளுக்கு சார்ஜ்	..	ரூ. 1—0—0
மேல் ஒவ்வொரு கேள்விக்கும்	...	ரூ. 0—4—0
ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத	...	ரூ. 4—0—0

தபால் செலவு வி. பி. அனுப்ப 4 அணாவாகும்.
விலாசம்:— மானேஜர்,
தமிழ்நாடு ஜோதிட நிலையம்,
(107) தபால்பெட்டி 253, சென்னை.

ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதார்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், ஏராளம் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரிகாபி இனும்.

வருட சந்தா தபாற்கூலி யுள்பட } உள்நாடுகளுக்கு ரூ. 1. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0

விலாசம்:-ஆனந்தபோதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.
(115)

சமையலில்
சுகம்
ருசி
சுத்தம்
சுலபம்
சென்னை செவன்மென்ஸ் ருக்மணி குக்கர்
அகேக உபயோகிகள்
1, 2, 4, 6, 8
பேர்களுக்கு
5-அளவுகள்
ரூ. 18, 18, 22, 28, 33
ருக்மணி குக்கர் கம்பெனி
இராயப்புரம் (15)
சென்னைப்பட்டினம்.
184-ஐ.

யாவணக்கால் வியாதிக்கு

திருவாரூர், டாக்டர் ஜி. என்னும் சாமி பிள்ளையவர்களின் மருந்து மிகச் சிறந்தது.
ஒரு முறை மருந்து ரூ. 15—0—0
ஷண்முகானந்த வைத்தியசாலை,
(228எ) திருவாரூர்.

மேகராஜ வைத்திய சாலை

மாயவரம்.

கெட்டமேக, புண், கிரந்தி, மூல, பவுத்திர முதலிய சகல ரோகங்களுக்கும் சம்பந்தமான சொஸ்தமாக 5 நாட்களில் நிவர்த்தியாகும். விலை ரூ. 5-0-0.

ப்ரமேகம், பவுத்திரம் முதலிய வியாதிகளுக்கு 7 நாளில் குணம் செய்யக்கூடிய ஜெயமுக சூரணம் விலை ரூ. 7-0-0.

பித்தம், வாதம், கபம், மேகம் முதலிய வியாதிகள் 24 நாளில் பூரண குணம் செய்யக்கூடிய மருந்து. விலை சேர் 1-க்கு ரூ. 3-0-0. பாக்கிங் & தபால்கூலி தனி.

மருந்துகள் பதிவு அதவாகை தெரிவிக்கவும்.

டாக்டர் S. V. ராமச்சந்திர நாயுடு,
மேகராஜ வைத்தியசாலை,
(176) மாயவரம்.

முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0தான் ரூ. 3-8-0தான்
110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி

சாமான்களின் விபரம்.

18 காரட் கோல்டு கோலிக அழகிய பெளண்டன் பேனா 1; 18 காரட் கோல்டு கோலிக இங்கிலீஷ் மோதிரங்கள் 2; ... 1; ... 1; ... 12; ... 1; ... 12; ... 12; ... 1; ... 12; ... 12; ஆகிய 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ. 3-8-0.
P. K. மூர்த்தி கம்பெனி,
223. தபால் பெட்டி 119, மதராஸ்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத
"ஆனந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகையை யொப்ப
நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப்
புதுவிதமாக வெளிவருகின்றது.
(5-வது ஆண்டு 3-வது ஆண்டு)
பிரபல ஆசிரியர்
ஸ்ரீமான் S. G. இராமாநுஜலு நாயுடு
அவர்களால் இப்பத்திரிகை
எழுதப்பட்டு வருகிறது.

அமிர்த குணபோதினி

ஞான போதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆனந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், கேட்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே 56-பக்கங்களுடனும் ஒரே ரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாதப் பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1—4—0. மாதிரி காப்பி இலவசம்.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகையொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஞானபோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞான ரசி, இதுவே அற்புத ...

கி. இராஜகோபால் முதலியார்.
அமிர்த குணபோதினி ஆபீஸ்.
(183) 302, தங்கசாலை வீதி, சென்னை.

காம்பவுண்டு ஸிரப்
ஆப்
கிலிஸரா பாஸ் பேட்ஸ்.

அதிக வேலையினாலும் சோம்பல், காய்ச்சலுக்குப்பின் ஆகிய உடல் பலஹீனம் போக்குவதில் தலை சிறந்தது முதலிய முக்கியமான சந்தர்ப்பங்களில் மிகவும் உபயோகமானது.

வெகுகாலம் சோர்வுள் பிடிக்கப்பட்ட தேகம் மெலிந்தவர்களுக்கு உடன் சக்தி அளிக்கும் இது ஒரு இன்றியமையாத மருந்தென்று புகழ்பெற்றது.

ஒரு புட்டியின் விலை ரூ. 1—8—0
அடிபிடிக்கண்ட இடத்தில் கிடைக்கும்.
வில்பெர்ட் பெரிரா,
குவாலிபைட் கெமிஸ்ட்,
டெலிபோன் நெ. 3194. வேப்பேரி.
(149, ஏ.)

இனும் !! இனும் !!!
புகைப்படம் என்னும் போடோ பிடிக்கும்
"கேமிரா" இனும்,

22 கேரட் ரோல்டுகோல்டு சிறந்த கெடியாரம் ஒன்றும், போடோ பிடிக்கும் கேமிரா ஒன்றும் இனுமாய் அனுப்பப்படும்.



போடோ பிடிக்கும் இப்பிரமாதமான போடோ கேமிரா இனுமாய் அனுப்பப்படும். இதனுடன் மாதம் 50 ரூபாய்க்கு குறையாமல் வரும்படி சம்பாதிக்கலாம். உடனே ஆர்டருக்கு முந்துங்கள்.

போடோ கேமிராவுடன் கெடியாரம் ...	...	விலை ரூ.	7—0—0
போடோ கேமிரா தனியாக வாங்கினால்	...	,,	2—8—0
கெடியாரம்	...	,,	6—0—0

மெயில் ஆர்டர் வாச் அவுஸ்
(219) பழைய வண்ணாரப்பேட்டை, போஸ்ட், மதராஸ்.

அமிருதாஞ்சனம்

எல்லா நோவுகளையும் வலிகளையும்
குணப்படுத்துகின்றது.
புட்டி 1-க்கு விலை அணா 10.
எல்லா விடங்களிலும் விற்கப்படும்.
அமிருதாஞ்சனம் டிபோ,
பம்பாய், அண்டு மதராஸ்.
(244)

Printed and Published by Mr. J. S. Kannappar at "Justic Printing Works, Madras.